DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.1011/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | நவீன் குமார் |
| Father's Name | : | அன்பழகன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அண்ணா நகர் முதல் தெருவில் குடியிருந்து திருக்காம்புலியூர் பைபாஸ் ரவுண்டானாவில் காபி கடை வைத்துள்ளேன். நான் TN 28 BY 7606 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை வாங்கி பயன்படுத்தி வந்தேன். கடந்த 15.7.2025ம் தேதி இரவு கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வந்து எனது

இருசக்கர வாகனத்தை வீட்டின் முன்புள்ள பார்க்கிங்கில் வாகனத்தை இரவு சுமார் நிறுத்திவிட்டு தூங்கச் சென்றேன். மறுநாள் காலை சுமார் 06.30 மணியளவில் நான் நிறுத்தியிருந்த வாகனத்தை பார்த்தபோது வண்டியை காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. வண்டியை திருடிச் சென்றிருக்கலாம் என்று கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். திருடுபோன வண்டியின் மதிப்பு ரூ.1,00,000/- இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். 07.08.2025ம் தேதி போலிசார் வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாகவும் சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்றேன். ஆஜர் 2ம் எதிரி இருசக்கர வாகனத்தை திருடியதாகவும், அவரிடமிருந்து வாகனத்தை கைப்பற்றியதாகவும் போலிசார் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள ராயல் என்பீல்டு இருசக்கர வாகனம் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் டிப்ளமோ அன்டு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துள்ளேன். புகாரை நான்தான் எழுதினேன். எனக்கு தமிழில் எழுதப் படிக்க தெரியும். நான் எழுதிக் கொடுத்த புகாரில் அடித்தல் திருத்தல் நிறைய உள்ளது என்றால் ஆமாம், நான்தான் அவ்வாறு திருத்தம் செய்து எழுதினேன். புகாரில் வண்டி எண்ணை திருத்தம் செய்து எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 16.07.2025 அன்று நான் காலை 10.00 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் வண்டியை நிறுத்திய இடத்தில் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். வண்டி காணாமல் போன இடமானது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். வண்டி திருடியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சிசிடிவியில் பதிவாகியுள்ளதை நான் பார்த்தேன். போலிசார் விசாரணையில் நான்

சொல்லியதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். போலிசார் சொல்லித்தான் எதிரியை எனக்கு அடையாளம் தெரியும் என்றால் சரிதான். எனது வண்டியில் ஆர்சி புத்தகம் மற்றும் இன்சூரன்ஸ் ஆகியவைகளை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். வாகனத்தை நான் முழு பணமும் செலுத்திதான் வாங்கினேன் என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றாலும், நான் மது அருந்திவிட்டு டாஸ்மாக் கடை முன்பு நிறுத்திவிட்டு வந்ததாகவும், திருடுபோனதாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எனக்கு அரசியல் செல்வாக்கு உள்ளதால் போலிசார் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக எதிரிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.1011/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கோபி கிருஷ்ணன் |
| Father's Name | : | கிருஷ்ண மூர்த்தி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். முதல் விசாரணை**

நான் வெங்கமேடு, ஜோசியக்கார தெருவில் குடியிருந்து அ.சா.1 கடைடியல் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் பரணி கிருஷ்ணன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 04.08.2025 ம் தேதி காலை சுமார் 05.00 மணியளவில் அண்ணா நகர் வழியாக சென்றபோது கரூர் நகர

போலிசார் இருசக்கர வாகனம் திருடுபோனது சம்மந்தமாக கரூர் நகர போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், பரணி கிருஷ்ணனும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

அ.சா.1 நவீனிடம் நான் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். வாகனம் தொலைந்த விஷயம் முன்னதாகவே தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் வாகனம் தொலைந்த விஷயம் முன்னதாகவே தெரியாது என்று நான் சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. நான் ஒரு கையொப்பம் செய்தேன். அண்ணா நகரில் வைத்து கையொப்பம் செய்தேன். அங்கு எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 1/4 மணி நேரம் இருந்தேன். நான் என்ன காரணத்திற்காக சென்றேன் என்றால் மாவு பாக்கெட் வாங்குவதற்காக சென்றேன். அ.சா.1 நவீன் எனது ஓனர் என்பதாலும், அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**